த.வெ.க. ஆட்சியில் சட்டம் ஒழுங்கு சீர்கேடு!

திருப்பூரில் தி.மு.க. மகளிர் அணி மகளிர் தொண்டரணி கண்டன ஆர்ப்பாட்டம்!

மாவட்டச் செயலாளர் க.செல்வராஜ் வேண்டுகோள்!



திருப்பூர், அக்.30- த.வெ.க. ஆட்சியில் நிலவிவரும் சட்டம், ஒழுங்கு சீர்கேடு, பெண்கள், குழந்தைக-ளுக்கு எதிரான பாதுகாப்பு குறைபாடுகள் மற்றும் கடுமையான விலைவாசி உயர்வை கண்டித்து திருப்பூரில் மத்திய மாவட்ட தி.மு.க. மகளிர் அணி - மகளிர் தொண்டர் அணி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று திருப்பூர் மத்திய மாவட்ட கழக செயலாளர், திருப்பூர் தெற்கு சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் க.செல்வராஜ் அறிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து அவர்விடுத்துள்ள அறிக்கை வருமாறு :-


தமிழகத்தில் கொலை, கொள்ளை, போதைப் பொருள் விற்பனை ஆகியவை அதிக-ரித்து சட்டம் ஒழுங்கு பெரியளவில் சீர்கேட்டு இருப்பதோடு, பெண்களுக்கு எதி-ரான வன்முறை மற்றும் குழந்தைகள் கடத்தல் ஆகியவை மிகப்பெரிய அளவில் அதிகரித்து தமிழகத்தை பாதுகாப்பற்ற மாநிலமாக இந்த ஆட்சி கொண்டு வந்தி-ருக்கிறது. இதுபோன்ற குற்றச் செயல்களில் ஆளும் த.வெ.கவினரே பெரிய அள-வில் ஈடுபட்டிருப்பதாக செய்திகள் வெளிவருகின்றன. இந்த அரசு சட்டம் ஒழுங்கை பாதுகாப்பதற்கும், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்-களை தடுப்பதற்கும், விலைவாசி உயர்வை கட்டுப்படுத்துவதற்கும் எவ்வித நடவ-டிக்கையும் மேற்கொள்ளவில்லை.

ஒரு பாதுகாப்பற்ற மாநிலமாக தமிழகத்தை படுகுழியில் தள்ளி உள்ள த.வெ.க அரசை கண்டித்து தி.மு.க மகளிர் அணியின் சார்பில் நாளை (31.10.2026 சனிக்-கிழமை) காலை 10.00 மணியளவில் அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று கழகத் தலைவர், திராவிட மாடல் நாயகர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார். அதனை தொடர்ந்து நாளை (31.10.2026 சனிக்கிழமை) காலை 9.30 மணிக்கு தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும் முதல் முதலில் சந்தித்த இடமான திருப்பூர் ரயில் முன்பு அமைந்துள்ள குமரன் சிலை அருகில் திருப்பூர் மத்திய மாவட்ட மக-ளிர் அணி, மகளிர் தொண்ட ரணி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் மாவட்டக் கழக செயலாளர் ஆகிய எனது தலைமையில், திருப்பூர் தெற்கு மாநகர கழகச் செயலாளர் டி.கே.டி மு.நாகராசன் வரவேற்புரையில், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் ப.கலைச் செல்வி, மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் ஆனந்தி ஆகியோர் முன்னிலையில் நடைபெற வுள்ளது.

எனவே திருப்பூர் மத்திய மாவட்ட தி.மு.கழகத்திற்கு உட்பட்ட மாநில, மாவட்ட, மாநகர கழக நிர்வாகிகள்,

மாநகர, ஒன்றிய, நகர பகுதி மற்றும் பேரூர் கழக மகளிர் அணி, மகளிர் தொண்-டர் அணி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்ட, வார்டு, ஊர் கிளை கழக செயலாளர்கள், நிர்வாகிகள், மகளிர் அணி நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற முன்னாள், இன்னாள் நிர்வாகிகள், கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பெருந்திரளாக கலந்து கொண்டு மக்கள் விரோத த.வெ.க. அரசுக்கு மாபெரும் கண்டனத்தை தெரிவித்து இந்த மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தை வெற்றியடைய செய்ய வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு திருப்பூர் மத்திய மாவட்டக் கழகச் செயலாளர், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் க.செல்வராஜ் தனது அறிக்கையின் வாயிலாக தெரிவித்துள்ளார்.



பெண்களின் பாதுகாப்பு முதல் மின்பற்றாக்குறை வரை – மக்கள் பிரச்சினைகளில் த.வெ.க. அரசின் மெத்தனப் போக்கு!

ஒருங்கிணைந்த கோவை மாவட்ட தி.மு.க. மகளிர் அணி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம்!

மாவட்ட பொறுப்பாளர் துரை.செந்தமிழ்ச் செல்வன் - மாவட்டச் செயலாளர்கள் தளபதி முருகேசன் - தொண்டாமுத்தூர் அ.ரவி கூட்டறிக்கை!







கோவை, அக். 30- தமிழகத்தில் பெண்களின் பாதுகாப்பு, சட்டம்-ஒழுங்கு நிலை, போதைப் பொருள் புழக்கம், அத்தியாவசியப் பொருட்களின் விலைவாசி உயர்வு, மின் கட்டண உயர்வு, மின்பற்றாக்குறை உள்ளிட்ட மக்கள் நலன் சார்ந்த பிரச்சினைகளைக் கண்டித்து, தி.மு.க. தலைமைக் கழக அறிவிப்பின்படி, நாளை (அக்டோபர் 31ம் தேதி) தமிழ்நாடு முழுவதும் தி.மு.க. மகளிர் அணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

கோவை மாவட்ட தி.மு.க. மகளிர் அணி சார்பில், நாளை (அக்டோபர் 31ம் தேதி சனிக்கிழமை) காலை 9.30 மணியளவில் ரேஸ் கோர்ஸ், செஞ்சிலுவை சங்கம் அருகில் கழக மேற்கு மண்டல பொறுப்பாளர், கோவை தெற்கு சட்டமன்ற உறுப்பினர் வி.செந்தில் பாலாஜி ஆலோசனையின் படி மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் மகளிர் அணி நிர்வாகிகள், மகளிர் தொண்டரணியினர், கழகத்தின் பல்வேறு அணிகளைச் சேர்ந்த மகளிர் மற்றும் கழகத் தோழர்கள் பெருந்திரளாகப் பங்கேற்க வேண்டும் என்று கோவை மாநகர் மாவட்ட பொறுப்பாளர் துரை.செந்தமிழ்ச் செல்வன், கோவை தெற்கு மாவட்ட கழக செயலாளர் தளபதி முருகேசன், கோவை வடக்கு மாவட்ட கழக செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி ஆகியோர் கூட்டாகக் கேட்டுக்கொண்டுள்ளனர்.

இதுகுறித்து அவர்கள் வெளியிட்டுள்ள கூட்டறிக்கையில் தெரிவித்திருப்பதாவது :

தமிழகத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டதன் விளைவாக த.வெ.க. அரசு ஆட்சிப் பொறுப்பேற்று ஆறு மாதங்கள் கூட முழுமையாக நிறைவடையாத நிலையில், தமிழகத்தில் சட்டம்-ஒழுங்கு, பெண்களின் பாதுகாப்பு மற்றும் மக்கள் நலன் சார்ந்த பிரச்சினைகள் குறித்து பல்வேறு கேள்விகள் எழுந்துள்ளன.

பெண்களும் சிறுமிகளும் அச்சமின்றி வாழ்வதற்கான பாதுகாப்பான சூழலை உருவாக்குவது எந்தவொரு அரசின் அடிப்படைக் கடமையாகும். ஆனால் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான குற்றங்கள், கொலைகள், தாக்குதல்கள் உள்ளிட்ட சம்பவங்கள் குறித்த செய்திகள் பொதுமக்களிடையே கவலையை ஏற்படுத்துகின்றன. இத்தகைய குற்றங்களைத் தடுக்கவும், பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கவும் குற்றவாளிகள் மீது சட்டப்படி உரிய நடவடிக்கை எடுக்கவும் அரசு உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

பெண்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதிலும், குற்றங்களைத் தடுப்பதிலும், சட்டம்-ஒழுங்கைப் பேணுவதிலும் அரசு கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என்பதே கழகத்தின் வலியுறுத்தலாகும்.

போதைப்பொருள் புழக்கம் இளைஞர்களின் எதிர்காலத்தையும் குடும்பங்களின் நிம்மதியையும் பாதிக்கக்கூடிய தீவிரமான சமூகப் பிரச்சினையாகும். பள்ளி, கல்லூரி மாணவர்கள் மற்றும் இளைஞர்களைப் போதைப்பொருள் பாதிப்பிலிருந்து பாதுகாப்பதுடன், போதைப்பொருள் கடத்தல் மற்றும் விற்பனையைத் தடுக்கவும் அரசு தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

பெண்களின் பாதுகாப்பு, சட்டம் ஒழுங்கு, போதைப்பொருள் ஒழிப்பு, விலைவாசிக் கட்டுப்பாடு மற்றும் சீரான மின்சார விநியோகம் ஆகியவை ஒவ்வொரு குடும்பத்தின் அன்றாட வாழ்க்கையையும் நேரடியாகப் பாதிக்கும் முக்கியமான மக்கள் நலப் பிரச்சினைகளாகும். இவற்றுக்குத் தீர்வு காண வேண்டிய அரசின் பொறுப்பை வலியுறுத்தும் வகையிலும், மக்களின் கவலைகளை ஜனநாயக வழியில் வெளிப்படுத்தும் வகையிலும் இந்தக் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

அது சமயம் ஒருங்கிணைந்த கோவை மாவட்டத்தைச் சேர்ந்த மகளிர் அணி நிர்வாகிகள், மகளிர் தொண்டரணியினர், கழகத்தின் அனைத்து அணிகளையும் சேர்ந்த மகளிர் மற்றும் கழகத் தோழர்கள் அனைவரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் பெருந்திரளாகக் கலந்துகொள்ள வேண்டும் என்று அவர்கள் அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

முன்னாள் எம்.எல்.ஏ. எம்.முத்துராமலிங்கம் சகோதரர்

எம்.பாண்டி மறைவு!

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, அக். 30–

திருமங்கலம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எம்.முத்துராமலிங்கத்தின் சகோதரர் எம்.பாண்டி அவர்கள் 28.10.2026 அன்று இயற்கை எய்தினார், என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

மறைவு செய்தி அறிந்த கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது ஆழ்ந்த இரங்கலை, அன்னாரது குடும்பத்தினருக்குத் தெரிவித்துள்ளார்.



கோவை மாநகர் மாவட்ட தி.மு.க. முன்னாள் செயலாளர், நாடாளுமன்ற, சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் சி.டி.தண்டபாணி அவர்களின் 25ம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு வடகோவையில் அமைந்துள்ள ஒருங்கிணைந்த கோவை மாவட்ட கழக அலுவலகத்தில் அன்னாரது திருவுருவப்படத்திற்கு மாநகர் மாவட்ட கழக பொறுப்பாளர் துரை.செந்தமிழ்ச் செல்வன் தலைமையில் கோவை வடக்கு மாவட்ட கழக செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி முன்னிலையில் மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தினர். இதில் மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், பகுதி வட்டக் கழக செயலாளர்கள், பொறுப்பாளர்கள், நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

வரலாற்றிலேயே இல்லாத அளவுக்கு கொள்முதல் விலை உயர்வு!

யூனிட்டுக்கு 41.50 ரூபா! யூனிட்டுக்கு 41.50 ரூபா!

முன்னாள் அமைச்சர் வி.செந்தில்பாலாஜி விமர்சனம்!



சென்னை, அக்.30- தமிழ்நாட்டின் வரலாற்றிலேயே இல்லாத அளவுக்கு ஒரு யூனிட் மின்சாரம் 41 ரூபாய் 50 காசுகளுக்கு த.வெ.க. அரசு கொள்முதல் செய்யவுள்ளது. இதற்கு முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

த.வெ.க. அரசு பொறுப்பேற்றதில் இருந்தே தமிழ்நாட்டில் அறிவிக்கப்படாத மின் வெட்டு நிலவுகிறது. இதனை சரி செய்ய வேண்டிய அமைச்சர் நிர்மல் குமாரோ இதுபற்றி கொஞ்சம் கவலைப்படாமல் உள்ளார்.

இதனிடையே, கடந்த மாதம் ஒரு யூனிட் மின்சாரம் 37 ரூபாய் 50 காசுகளுக்கு கொள்முதல் செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டது. தற்போது தமிழ்நாட்டின் வரலாற்றிலேயே இல்லாத அளவுக்கு 41 ரூபாய் 50 காசுகளுக்கு மின்சாரம் கொள்முதல் செய்யப்படவுள்ளது.

இதுதொடர்பாக முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி வெளியிட்டுள்ள சமூக வலைத்தளப் பதிவில், யூனிட்டுக்கு 41 புள்ளி 50 ரூபா.... யூனிட்டுக்கு 41புள்ளி 50 ரூபா..... என்று விமர்சித்துள்ளார்.

நீலகிரி மாவட்ட தி.மு.க. மகளிர் அணியினர்

உதகையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

மாவட்ட கழக பொறுப்பாளர் கே.எம்.ராஜூ எம்.எல்.ஏ. அறிக்கை!



நீலகிரி, அக். 30- அமைதிப் பூங்காவான தமிழ்நாடு இன்று குற்றவாளிகளின் புகலிடமாக மாற்றப்பட்டுள்ளது. அதிகாலையில் அன்றாடம் செய்தித்தாள்களைத் திறந்தால் கொலை, கொள்ளை, வழிப்பறி மற்றும் போதைப்பொருட்களின் நடமாட்டம் குறித்த செய்திகளே ஆக்கிரமித்துள்ளன. காவல் துறையின் கைகள் முற்றிலுமாக கட்டப்பட்டு, சட்டம் ஒழுங்கு முற்றிலுமாக முடங்கி, பொதுமக்களின் உயிருக்கும் உடைமைக்கும் எவ்வித பாதுகாப்பும் இல்லாத அவல நிலை இன்று தமிழ்நாட்டில் நிலவுகிறது.

"பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்" போற்றப்பட வேண்டிய இந்த மண்ணில், இன்று த.வெ.க அரசின் அவலத்தால், பள்ளிக் குழந்தைகள் முதல் பணிக்குச் செல்லும் பெண்கள் வரை சமூக விரோதிகளால் தொடர்ந்து அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டு, பெண் குழந்தைகளும், பெண்களும் வீட்டை விட்டு வெளியே சென்று பாதுகாப்பாக வீடு திரும்புவது பெரும் சவாலாக மாறியுள்ளது. பெண்களுக்கு எதிரான குற்றங்கள் மீதான த.வெ.க அரசின் அலட்சியப் போக்கும், குற்றவாளிகள் மீது கடுமையான நடவடிக்கைகளை எடுக்க தவறும் நிர்வாக சீர்கேடே இந்த பாதுகாப்பற்ற சூழ்நிலைக்கு காரணமாக உள்ளது.

ஒருபுறம் பாதுகாப்பற்ற சூழல் என்றால், மறுபுறம் ஏழை எளிய மக்களின் வாழ்வாதாரத்தை நசுக்கும் அத்தியாவசிய பொருட்களான விலைவாசி உயர்வு. அரிசி, பருப்பு, சமையல் எண்ணெய், காய்கறிகள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களின் விலைகளும் நாளுக்கு நாள் விண்ணைத் தொடும் அளவிற்கு உயர்ந்துள்ளது.

த.வெ.க., அரசு தமிழகத்தில் ஆட்சி பொறுப்பில் அமர்ந்த நாள் முதல் ஒவ்வொரு இல்லத்தரசிகள் ஒவ்வொரு நாளும் பெரும் பொருளாதார நெருக்கடியை சந்தித்து, தங்களது வாழ்வாதாரத்தை இழந்து தவிக்கின்றனர்.

இந்நிலையில், நமது உரிமைகளை மீட்டெடுக்கவும், தமிழ்நாட்டில் பெண்களின் பாதுகாப்பிற்கு அரணாக நிற்கவும், திராவிட முன்னேற்ற கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பின்படி, மகளிர் அணி பொறுப்பாளர் கழக துணை பொது செயலாளர் மாண்புமிகு கனிமொழி ராஜாத்தி கருணாநிதி MP., அவர்கள் ஆலோசனைப்படியும் நீலகிரி மாவட்ட திமுக மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டர் அணி சார்பில் நாளை (31-10-2026 சனிக்கிழமை) காலை 11 மணியளவில் உதகை ஏ.டி.சி., ஜீப் நிறுத்தம் முன்பு மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது.

இந்த ஆர்பாட்டத்தில் நீலகிரி மாவட்டத்திலுள்ள மாவட்ட, நகர, ஒன்றிய, பேரூர் கழக மகளிர் நிர்வாகிகள், அனைத்து மகளிர் அணி - மகளிர் தொண்டர் அணி நிர்வாகிகள், இன்னாள்-முன்னாள் மகளிர் உள்ளாட்சி பிரதிநிதிகள் உள்ளிட்ட அனைவரும் பெருந்திரளாக கலந்துக்கொண்டு ஆர்பாட்டத்தை வெற்றி பெற செய்திடவும், இவர்களுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் தொடர்புடைய நகர - ஒன்றிய - பேரூர் கழக செயலாளர்கள் சிறப்புடன் செய்திடவும் வேண்டுகிறேன்.

இவ்வாறு மாவட்ட கழக பொறுப்பாளர் கே.எம். ராஜூ எம்.எல்.ஏ. அறிக்கை வெளியிட்டுள்ளார்.

மகளிர் அணி, மகளிர் தொண்டரணி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் திரளாக பங்கேற்பீர்!

மாநில மகளிர் தொண்டர் அணி செயலாளர் நாமக்கல் ப.ராணி அழைப்பு!

நாமக்கல் அக் 30- சட்டம் ஒழுங்குக்கும், தனக்கும் சம்பந்தமில்லை என்பது போல முதலமைச்சர் ஏன் மௌனமாக இருக்கிறார் ? சட்டம் ஒழுங்குபற்றி வாய் கிழிய பேசுவதில் வல்லவரான அவர் இப்போது ஏன் வாயே திறப்பதில்லை.

தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு சீர்கேட்டை கண்டித்து நாளை 31ஆம் தேதி சனிக்கிழமை தமிழ்நாடு முழுவதும் கழக மகளிர் அணி சார்பில் போராட்டம் நடத்தப்படும் என்று கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

இதை அடுத்து திமுக மகளிர் தொண்டர் அணி செயலாளர் நாமக்கல் ப.ராணி அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில், கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளது படி அவரது ஆணைக்கேற்ப கழக இளைஞர் அணி செயலாளரும் தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அறிவுறுத்தலின்படி, கழக துணை பொதுச்செயலாளரும், தி.மு.க. மகளிர் அணி செயலாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான கனிமொழி ராஜாத்தி கருணாநிதி அவர்கள் அறிவுறுத்தலின் பேரில் தமிழ்நாடு முழுவதும் நடைபெறும் இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் மகளிர் அணி நிர்வாகிகள் மற்றும் மகளிர் தொண்டர் அணி நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுமென என அழைப்பு விடுத்துள்ளார்.

நாமக்கல் மாவட்ட ஒருங்கிணைந்த திமுக மகளிரணி மற்றும் மகளிர் தொண்டரணி சார்பில், சட்டம் ஒழுங்கு சீர்கேடு, பெண் குழந்தைகள் பாதுகாப்பு மற்றும் விலைவாசி உயர்வு உள்ளிட்டவற்றைக் கண்டித்து

நாளை (31.10.2026 சனிக்கிழமை) காலை 9 மணிக்கு நாமக்கல் பூங்கா சாலையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது.

மாநில தொண்டரணி செயலாளர் ப.இராணி தலைமையில் நடைபெறும் ஆர்ப்பாட்டத்தில், மாநில வலைதளப் பொறுப்பாளர் அ.ரியா மற்றும் நிர்வாகிகள் ஜோதிலட்சுமி, கௌரி, ஜோதி, ராதிகா ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இதில் நாமக்கல் கிழக்கு, மேற்கு மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர் மகளிரணி நிர்வாகிகள் மற்றும் விலைவாசி உயர்வால் பாதிக்கப்பட்ட பெண்கள் திரளாகப் பங்கேற்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.



கோவை வடக்கு மாவட்டம், தொண்டாமுத்தூர் சட்டமன்ற தொகுதி, தாளியூர் பேரூர் கழக 3வது வார்டு செயலாளர் தீனம்பாளையம் ஆறுச்சாமி அவர்கள் அண்மையில் மறைவெய்தியதையொட்டி கழக மேற்கு மண்டல கழக பொறுப்பாளர் கோவை தெற்கு சட்டமன்ற உறுப்பினர் வி. செந்தில் பாலாஜி அன்னாரது திருவுருவப் படத்திற்கு மலரஞ்சலி செலுத்தி குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். உடன் கோவை வடக்கு மாவட்ட கழக செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி, கோவை மாநகர் மாவட்ட கழக பொறுப்பாளர் துரை.செந்தமிழ்ச் செல்வன், கோவை பாராளுமன்ற உறுப்பினர், முனைவர் கணபதி ப.ராஜ்குமார், தாளியூர் பேரூர் கழக செயலாளர் தண்டபாணி உள்ளனர்.